**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 03.11.2020**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 1641/E/2020**

திரு.சி.முருகன் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
சார் ஆட்சியர் அலுவலகம்,
சிவகாசி வட்டம்,
விருதுநகர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

மேல்முறையீட்டாளர் 28.10.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் சிவகாசி வருவாய் கோட்டாட்சியருக்கு கடந்த 12.01.2019 ஆம் தேதியில் சிவகாசி வட்டாட்சியர் அவர்களின் ஆணைகள் ந.க.அ1/9334/2018 உத்தரவினை ஆட்சேபித்து மேல்முறையீட்டாளர் அனுப்பிய விண்ணப்பத்திற்கு எண் அளிக்கப்பட்ட பகிர்மான பதிவேட்டின் பதிவு செய்யப்பட்ட தன்பதிவேட்டின் பதிவு அஞ்சல் பதிவேட்டின் சம்பந்தப்பட்ட பக்கங்களின் ஒளிநகல், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மேல்முறையீட்டாளருக்கு பட்டா மாற்றம் செய்ய ஆணை அளிக்காமல் இன்று வரை கால தாமதம் செய்யும் அலுவலரின் பெயர், பதவி, விலாசம், அதற்கு பதிவு செய்யப்பட்டுள்ள காரணம், மேல்முறையீட்டாளரின் விண்ணபத்தின் மீது விசாரணை செய்த அலுவலர்களின் பெயர், பதவி, அலுவலக விலாசம், விசாரணை செய்த தேதி ஆகிய விபரம் மற்றும் அவர்களின் நாட்குறிப்பின் அந்த விசாரணை நாட்களின் ஒளிநகல் உள்ளிட்ட 5 இனங்களில் தகவல்களைக் கோரியதன்பேரில், பொதுத் தகவல் அலுவலர் 26.11.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ள தகவல் தனக்கு திருப்தியளிக்கவில்லை என்று தெரிவித்து

மேல்முறையீட்டாளர் 25.12.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். தொடர்ந்து 14.02.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும் முழுமையான தகவல் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்து வந்த மேல்முறையீட்டாளர்களின் மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று காணொலி காட்சி மூலம் விவாதிக்கப்பட்ட நிலையில், சிவகாசி சார் ஆட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளருக்கு 21.10.2020 தேதியிட்ட கடிதத்தில் தகவல்களை பதிவஞ்சலில் அனுப்பியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளருக்கு வழங்கிய தகவலில் இனம் 4-ற்கான தகவலை இவ்வாணையம் வன்மையாகக் கண்டிக்கிறது. ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு உரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்பது தெரிய வருகிறது. மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் வழங்கப்பட வேண்டிய தகவல் என்றே ஆணையம் தீர்மானித்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1. **மேல்முறையீட்டாளர் 28.10.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகின்றது.**

2. **மேல்முறையீட்டாளர் 28.10.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை குறிப்பிட்ட நாட்களுக்குள் வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்கீழ் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்படுமென்பது தெரிவிக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 1641/E/2020</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
சார் ஆட்சியர் அலுவலகம்,
சிவகாசி வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**
திரு.சி.முருகன்,
எண்.1/727, வடபட்டி கீழூர்,
பூவநாதபுரம் அஞ்சல்,
சிவகாசி தாலுக்கா,
விருதுநகர் மாவட்டம்.

Copy to: Judgement File.
*"VP / PA -09.11.2020"*